**பட்டியல் வகுப்பினர் பழங்குடியினருக்கான (வன்கொடுமை தடுப்பு)**

**சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.**

**முன்னிலை: திரு. M. வடிவேல், பி.காம்., பி.எல்.,**

அமர்வு நீதிபதி பட்டியல் வகுப்பினர் மற்றும்

பழங்குடியினருக்கான(வன்கொடுமை தடுப்பு)

சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**சிறப்பு அமர்வு வழக்கு எண். 81/2025**

**[CNR.NO.TNTV16-000081-2025]**

(தஞ்சாவூர் முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்

சிறப்பு அமர்வு வழக்கு எண். 137/2017

[CNR.NO.**TNTJ**09000513-2027])

| | |
|---|---|
| புகார்தாரரின் பெயர் | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>மன்னார்குடி உட்கோட்டம்,<br>தலையாமங்கலம் காவல் நிலைய<br>குற்ற எண். 01/2017. |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | **1. குமரவேல்**, (வயது 40/2026) **1-ம் எதிரி**<br>த/பெ. கைலாசம்,<br>மேலகுடியிருப்பு, ஏத்தக்குடி,<br>மன்னார்குடி தாலுக்கா.<br>**2. வெங்கடேசன்**, (வயது 36/2026)<br>**2-ம் எதிரி**<br>த/பெ. பாரதிமோகன்,<br>மேலகுடியிருப்பு, ஏத்தக்குடி. |

| | |
|---|---|
| | மன்னார்குடி தாலுக்கா.<br>**3. செந்தில்**, (வயது 45/2026) **3-ம் எதிரி**<br>த/பெ. ஆனந்தன்,<br>மேலகுடியிருப்பு, ஏத்தக்குடி,<br>மன்னார்குடி தாலுக்கா.<br>**4. ராஜ்**, (வயது 41/2026) **4-ம் எதிரி**<br>த/பெ. கோவிந்தராஜன்<br>வடக்குத்தெரு, சோழபாண்டி,<br>மன்னார்குடி தாலுக்கா.<br>**5. தமிழரசன்**, (வயது 41/2026) **5-ம் எதிரி**<br>த/பெ. ராமன்,<br>மேலக்குடியிருக்கு, ஏத்தக்குடி,<br>மன்னார்குடி தாலுக்கா.<br>**6. துரையசரன்**, (வயது 50/2026)<br>**7-ம் எதிரி**<br>த/பெ. கோவிந்தராசு,<br>வடக்குத்தெரு, சோழப்பாண்டி.,<br>மன்னார்குடி தாலுக்கா. |
| எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் விபரம் | **1ம் எதிரி மீது**<br>இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. |

| | |
|---|---|
| | (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va).<br>**2 ம் எதிரி மீது.**<br>இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va).<br>**3 ம் எதிரி மீது.**<br>இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1) |

| | |
|---|---|
| | (s), இ.த.ச.பிரிவு 336 (6 **எண்ணிக்கைகள்**), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va).<br>**4ம் எதிரி**<br>இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 **எண்ணிக்கைகள்**),<br>**5ம் எதிரி**<br>இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s),இ.த.ச.பிரிவு 336 (6 **எண்ணிக்கைகள்**), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va). |

| | |
|---|---|
| | **7 ம் எதிரி**<br>இ.த.ச.பிரிவு 147 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va). |
| எதிரிகள் காவலில் அடைக்கப்பட்ட நாள் | இவ்வழக்கின் எதிரிகள் 02.01.20217 ஆம் தேதி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். |
| புகார் வாக்குமூலம் கொடுக்கப்பட்ட நாள் | 01.01.2017 |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 27.06.2017 |
| கு.வி.மு.ச பிரிவு 228- ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்டகப்பட்ட நாள் | 16.02.2018 |
| கு.வி.மு.ச பிரிவு 311-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட பலவகை மனுக்கள் மற்றும் அதன் | -- |

| | | |
|---|---|---|
| மீதான உத்தரவுகள். | | |
| **சாட்சிகள்** | **மு.வி. நாள்** | **கு.வி. நாள்** |
| அ.சா.1 மோகன் - புகார்தாரர் | 10.06.2019 | 29.12.2021 |
| அ.சா.2 பார்த்திபன் | 10.06.2019 | இல்லை |
| அ.சா.3 சுந்தர் | 10.06.2019 | 05.01.2022<br>04.03.2026 |
| அ.சா.4 ராஜராஜன் | 24.06.2019 | 23.06.2025<br>09.03.2026 |
| அ.சா.5 கவிதா | 08.07.2019 | 23.06.2025<br>04.03.2026 |
| அ.சா.6 ரவி | 08.07.2019 | இல்லை |
| அ.சா.7 மலர்கொடி - வட்டாட்சியர் | 22.07.2019 | 22.07.2019 |
| அ.சா.8 சிவா - நீதித்துறை நடுவர் | 05.08.2019 | 05.08.2019 |
| அ.சா.9 கீர்த்திவாசன் - மருத்துவர் | 05.08.2019 | 05.08.2019 |
| அ.சா.10 பாஸ்கர் | 14.10.2019 | 14.10.2019 |
| அ.சா.11 ராஜேந்திரன் - காவல் உதவி ஆய்வாளர் | 29.09.2022 | 29.09.2022 |
| அ.சா.12 ரவிச்சந்திரன் - கூடுதல் காவல் கண்காணிப்பாளர் | 15.10.2022 | 15.10.2022 |

| | | |
|---|---|---|
| அ.சா.13 குணசேகரன் - குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளர் | 19.03.2025 | 11.07.2015 |
| அ.சா.14 பாலாஜி | 23.03.2026 | இல்லை |
| கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 25.08.2025 | |
| எதிரிகள் தலைமறைவான நாள் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | --- | |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் கூற்று | குற்றவாளிகள் இல்லை | |
| நீதிபதியின் தீர்மானம் | எதிரிகள் குற்றவாளிகள் இல்லை. | |
| நீதிபதியின் தீர்ப்பு | **முடிவாக**, 1ம் எதிரி மீது, இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 **எண்ணிக்கைகள்**), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) கீழும், | |

| | |
|---|---|
| | 2ம் எதிரி மீது, இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும்,<br>3 ம் எதிரி மீது, இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும்,<br>4 ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. |

| | |
|---|---|
| | (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்)<br>5ம் எதிரி மீது, இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s),இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) மீதும்,<br>7ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 147 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 |

| | |
|---|---|
| | எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச் சாட்டுகளிலிருந்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 235-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br>இவ்வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கு 25.03.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுக்காக சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.S.மகாதேவன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 மற்றும் 7ம் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.B.டில்லிபாபு அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலித்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## தீர்ப்புரை

**1. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:**

காவல் துறையினர் முன்னதாக இவ்வழக்கில் மேலே சொல்லியுள்ள 1 எதிரி குமரவேல், 2 ம் எதிரி வெங்டேசன், 3 ம் எதிரி செந்தில், 4 ம் எதிரி ராஜ்,

5 எதிரி தமிழரசன் 6-ம் எதிரி விக்னேஷ்வரன் (எ) விக்னேஷ் 7ம் எதிரி துரையரசன் என 7 எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல்செய்துள்ளனர். அந்த இறுதி அறிக்கையின்படி, இவ்வழக்கின் அ.சா-1 மற்றும் அவரை சார்ந்தவர்கள் அனைவரும் இந்து ஆதிதிராவிடர் பறையர் வகுப்பை சார்ந்தவர்கள். எதிரிகள் அனைவரும் இந்து கள்ளர் வகுப்பை சார்ந்தவர்கள். கடந்த 01.01.2017 ஆம் தேதி 00.45 மணிக்கு அ.சா-1ம், அவரை சார்ந்தவர்களும் ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு இவர்களை தெரு முகப்பில் அ.சா-1 ஐ சார்ந்த பசங்களும், கேக் வெட்டி இனிப்பு கொடுத்து ஆரவாரம் செய்து கொண்டாடி, வாளியில் சுண்ணாம்பு கரைசலுடன் எழுத சென்றதும் எதிரிகள் அனைவரும் இங்கு எழுதக்கூடாது என்று அ.சா-1 தரப்பிற்கும், எதிரிகளுக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டு சத்தம் பேட்டு அ.சா-1 மற்றும் அவரை சார்ந்தவர்கள் கேட்டபோது எதிரிகள் அனைவரும் கற்களை வீசி தாக்கி, 1ம் எதிரி, அ.சா-1யை கம்பியால் இடது கை மணிக்கட்டில் தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், 2ம் எதிரி கையால் கண்ணத்தில், முக்கில் தாக்கியும், 3ம் எதிரி கம்பால் தாக்கியும், மற்ற எதிரிகளான 4, 5, 6 மற்றும் 7வது எதிரிகள் இவங்க புண்டை மகன்களை விடாதீங்கடா இந்த பற நாய்களுக்கு அவ்வளவு திமிரா, அடித்து கொல்லுங்கடா என சத்தம் போட்டு கல்லால் சாட்சி -1யும் அவர்கள்

சார்ந்தவர்களையும் தாக்கி சொற்ப காயத்தை ஏற்படுத்தியதாகவும் இதனால் 1- வது எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு 148 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) , இ.த.ச பிரிவு 326 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), அல்லது இ.த.ச பிரிவுகள் 326 உ/இ 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v) , இ.த.ச பிரிவுகள் 323 உ/இ 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) , ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச பிரிவு 336 (6 எண்ணிக்கை) , இ.த.ச பிரிவு 506(ii) உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) கீழும், 2- வது எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு 148 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவுகள் 326 உ/இ 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v) , இ.த.ச பிரிவுகள் 323 உ/இ 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) , ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s) , இ.த.ச பிரிவு 336 (6 எண்ணிக்கை), இ.த.ச பிரிவு 506(ii) உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) கீழும், 3-வது எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு 148 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவுகள் 326 உ/இ 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச பிரிவு 323 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) அல்லது இ.த.ச பிரிவுகள் 323 உ/இ 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச பிரிவு 336 (6 எண்ணிக்கை),

இ.த.ச பிரிவு 506(ii) உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va)ன் கீழும், 4- வது எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு 148 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவுகள் 326 உ/இ 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச பிரிவுகள் 323 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) அல்லது இ.த.ச பிரிவு 323 உ/இ 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச பிரிவு 336 (6 எண்ணிக்கை) ன் கீழும், 5- வது எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு 148 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவுகள் 326 உ/இ 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v) அல்லது இ.த.ச பிரிவுகள் 323 உ/இ 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச பிரிவு 336 (6 எண்ணிக்கை), இ.த.ச பிரிவு 506(ii) உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும், 6- வது எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு 147 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவுகள் 326 உ/இ 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v) அல்லது இ.த.ச பிரிவு 323 உ/இ 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச பிரிவு 336 (6 எண்ணிக்கை), இ.த.ச பிரிவு 506(ii) உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va)-ன் கீழும் தண்டிக்கப்பட வேண்டுமென மன்னார்குடி

உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் இறுதி அறிக்கை அவர்கள் தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி இறுதி அறிக்கையானது மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 ல் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி நீதிமன்றத்தில் PRC. No.24/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் எதிரிகள் ஆஜரானவுடன் கு.வி.மு.ச பிரிவு 209 ன் கீழ் மேற்படி மன்னார்குடி நீதிமன்றம் தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் விசாரணைக்கு அனுப்பியுள்ளது. மேற்படி தஞ்சை நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண்.137/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 7 எதிரிகள் ஆஜராகியுள்ளனர். இந்நிலையில் 6 ம் எதிரி வழக்கு விசாரணைக்கு ஆஜராகதாததால் அவருக்கு எதிராக பிடிக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் இருந்துவந்து பின்னர் 6 ம் எதிரிக்கு எதிராக பிணையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பிணைய பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்படி வழக்கில் 6 ம் எதிரி மீதான வழக்கை மட்டும் பிரித்து எடுத்து புதிய வழக்கு எண் SSC.No.143/2024 என வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 1 முதல் 5 மற்றும் 7 ம் எதிரிகளை பொருத்த வரையில் இந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்றுள்ளது.

**3.** இவ்வழக்கில் அரசு தரப்பு மற்றும் 1 முதல் 5 மற்றும் 7ம் எதிரிகள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் இவ்வழக்கின்

**(i) 1ம் எதிரி மீது** இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும்.

**(ii) 2ம் எதிரி மீது** இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும்.

**(iii) 3ம் எதிரி மீது** இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும்.

(iv) **4ம் எதிரி மீது** இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்) -ன் கீழும்.

(v) **5ம் எதிரி மீது** இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s),இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும்.

(vi) **7ம் எதிரி மீது** இ.த.ச.பிரிவு 147 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும்.

மேற்கண்டவாறு குற்றச்சாட்டுகள் வனைந்து, தமிழில் படித்துக்காட்டி விளக்கி கூறி வினவியபோது 1 முதல் 5 மற்றும் 7ம் எதிரிகள் குற்றசாட்டுகளை மறுத்துள்ளனர். இதனை தொடர்ந்து

அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக மேற்படி தஞ்சை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**4.** தஞ்சை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் அ.சா-1 முதல் அ.சா-14 வரை சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ-1 முதல் அ.சா.ஆ-17 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு பின்னர் அரசு தரப்பு சாட்சியங்கள் முடித்துக்கொள்ளப்பட்டுள்ளது. பின்பு வழக்கில் எதிரிகளுக்கு எதிராக கு.வி.மு.ச பிரிவு 313(1)(b) கீழ் வினா கேட்கப்படவேண்டிய நிலையிலிருக்கும் போது திருவாரூர் மாவட்டத்தில் புதிதாக பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான இந்த புதிய நீதிமன்றம் கடந்த 19.07.2025 ம் தேதியன்று உருவாக்கப்பட்டதை தொடர்ந்து, இவ்வழக்கு நிகழ்வானது இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் நடைபெற்றுள்ளது என்பதால் மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு மேற்படி இவ்வழக்கு கோப்பு வந்தவுடன் புதிதாக வழக்கு எண் SSC No. 81/2025 என எண் கொடுக்கப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**5.** இவ்வழக்கை பொருத்தவரையில் அ.சா-1 முதல் அ.சா-14 வரையான சாட்சியங்கள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ-1 முதல் அ.சா.ஆ-17 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **அரசு தரப்பு சாட்சியங்களின் சாரம்சம்**:

(i) **அ.சா-1 மோகன்**, இவரது மனைவி **அ.சா-5 கவிதா** இவர்கள் இருவரும் ஏத்தங்குடி, பாரதியார் தெருவில் மேலக்குடியில் வசித்து வருகிறார்கள். அ.சா-1-ன் ஊரை சேர்ந்த **அ.சா-3 சுந்தர்**, **அ.சா-4 ராஜராஜன்**, ஆவார்கள். இவர்களின் சாட்சியங்களின் படி இவர்கள் அனைவரும் இந்து பறையர் சமூகத்தை சார்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 31.12.2016 ஆம் தேதி இரவில் அதாவது 01.01.2017 ஆம் தேதி அதிகாலை 12.40 மணிக்கு இந்த சாட்சிகள் உள்ள தெருவில் உள்ள இளைஞர்கள் ஆங்கில புத்தாண்டு கொண்டாடியுள்ளார்கள். அவர்கள் சுண்ணாம்பு வாளியை எடுத்துக்கொண்டு ஆங்கில புத்தாண்டை கொண்டாட வேண்டி சுவரில் எழுத சென்றுள்ளார்கள். அப்போது கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் சுண்ணாம்பால் எதுவும் எழுதக்கூடாது என கூறியுள்ளனர். இதனால் இந்த சாட்சிகளின் தெருவை சேர்ந்தவர்களுக்கும், கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கும் இடையே சண்டை ஏற்பட்டுள்ளது. சாட்சிகள் அ.சா-1 மோகன், அ.சா-3 சுந்தர், அ.சா-4 ராஜராஜன், அ.சா-5 கவிதா ஆகியோர்கள்

அங்கு வந்தபோது இந்த எதிரிகள் அங்கு இருந்துள்ளனர். அங்கிருந்து இந்த எதிரிகள் இந்த சாட்சிகளை தாக்கியுள்ளனர். இதனால், காயம்பட்ட மேற்படி சாட்சிகள் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளனர். அங்கு தலையாமங்கலம் காவல்துறையினர் மருத்துவமனைக்கு வந்தபோது அ.சா.1 ஆனவர் **அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலம்** கொடுத்துள்ளார்.

(ii) **அ.சா.11 ராஜேந்திரன்** இவர் தலையாமங்கலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது மன்னார்குடி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையிலிருந்து அ.சா.1-டம் அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.01/2017 இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 352, 323, 324, 506(2) மற்றும் உடன்இணைந்த 3(1) (r), 3(1) (s) மற்றும் 3(2)(va) SC / ST (PoA) Act-ன் கீழ் **அ.சா.ஆ.6 ஆன முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்துள்ளார்.

(iii) **அ.சா.12 ரவிச்சந்திரன்** இவர் மன்னார்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது கடந்த 01.01.2017-ம் தேதி அ.சா.ஆ.6 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் கீழான வழக்கை திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள்

இந்த அ.சா.12 புலன்விசாரணை செய்ய வேண்டுமென் **அ.சா.ஆ-7 ஆன செயல்முறை ஆணையில்** உத்தரவிட்டதன் பேரில் இந்த அ.சா.12 ஆனவர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மாலை 05.30 மணியளவில் சம்பவ இடம் சென்று **அ.சா.6 ரவி** மற்றும் **அ.சா.10 பாஸ்கர்** ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.8 பார்வை மகஜர்**, **அ.சா.ஆ.9 மாதிரி வரைபடம்** தயார் செய்துள்ளார். பின்னர், இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். இதனை தொடர்ந்து 1-ம் எதிரி குமரவேல், 2-ம் எதிரி வெங்கடேசன், 4-ம் எதிரி ராஜ், 5-ம் எதிரி தமிழரசன், அ.சா.6 விக்னேஷ், அ.சா.7 துரையரசன் ஆகியோர்களை கைது செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

**(iv)** அ.சா.12 ஆனவர் மேலும், இந்த வழக்கில் உள்ள சாட்சிகள் மற்றும் எதிரிகளுக்கு சாதி சான்றிதழ் வேண்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். அ.சா.1-ன் வாக்குமூலத்தை கு.வி.மு.ச பிரிவு 164-ன் கீழ் பதிவு செய்ய வேண்டுமென அ.சா.1 மன்னார்குடி நீதித்துறை நடுவர் அவர்களிடம் ஆஜர் செய்து அவர் அளிக்கும் வாக்குமூலத்தை பதிவு செய்ய கேட்டுக்கொண்டுள்ளார். **அ.சா.8 சிவா** இவர் மன்னார்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நீதித்துறை நடுவராக

பணிபுரிந்தபோது, அ.சா.1 நீதிமன்றத்தில் ஆஜராகி அளித்த கு.வி.மு.ச பிரிவு 164-ன் கீழ் **அ.சா.ஆ.3 வாக்குமூலத்தை** பதிவு செய்துள்ளார். இந்நிலையில் அ.சா.12 விடுப்பில் சென்றுள்ளார்.

(v) **அ.சா.13 குணசேகரன்** என்பவர் மன்னார்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பொறுப்பேற்றுக்கொண்டு இவ்வழக்கினை இவர் புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டுமென திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **அ.சா.ஆ.10 ஆன செயல்முறை ஆணை** மூலம் உத்தரவு பிறப்பித்ததன் அடிப்படையில் இவர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவரான **அ.சா.9 கீர்த்திவாசன்** என்பவரை விசாரணை செய்தபோது அ.சா.1 மோகன், அ.சா.2 பார்த்திபன், அ.சா.4 ராஜராஜன், சுனில், கார்த்தி, அ.சா.3 சுந்தர், அ.சா.14 பாலாஜி, ராஜ்குமார் ஆகியோர்களுக்குரிய விபத்து பதிவேடுகள் முறையே **அ.சா.ஆ.4**, **அ.சா.ஆ.11 முதல் அ.சா.ஆ.17** வரையிலான ஆவணங்களை பெற்றுள்ளார்.

(vi) அ.சா.13 மேலும் இந்த வழக்கில் உள்ள அ.சா.1 மோகன் என்பவர் இந்து பறையன் ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என அ.சா.ஆ.2 ஆன சாதி சான்றிதழை வட்டாட்சியர் **அ.சா.7 மலர்கொடி** என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வாக்குமூலங்கள் மற்றும்

ஆவணங்களை பரிசீலனை செய்து அதன் பேரில் எதிரிகள் மீது கடந்த 31.03.2017 ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

(vii) இவ்வழக்கில் அரசு தரப்பில் சாட்சியமளித்துள்ள **அ.சா.2 பார்த்திபன்**, **அ.சா.6 ரவி**, **அ.சா.10 பாஸ்கர்** ஆகியோர்கள் இந்த வழக்கு சம்பந்தமாக தெரியாது என்று கூறியுள்ளனர். **அ.சா.14 பாலாஜி** என்பவர் சம்பவ தினத்தன்று கூட்டத்தில் இருந்த நபர்களில் யாரோ ஒருவர் தன்னைஅடித்துவிட்டதாக கூறியுள்ளார்.

**7.** 1 முதல் 5 மற்றும் 7 ம் எதிரிகள் மீது இந்த நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு எதிராக உள்ள பொருண்மைகளை பொருத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(b) ன் கீழ் எதிரிகளிடம் வினாக்கள் வினவியபோது எதிரிகள் அரசு தரப்பு சாட்சியங்கள் பொய் சாட்சியங்கள் என கூறியுள்ளனர். மேலும், தங்களது தரப்பில் சாட்சியங்கள் விசாரணை செய்யப்படவேண்டும் என கூறியுள்ளனர். ஆனால் சாட்சியங்கள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. இதனை தொடர்ந்து அரசு தரப்பு வாதத்திற்காக வழக்கு நிலுவையிலிருந்து வந்து போது அரசு தரப்பில் இவ்வழக்கில் காயம் பட்டதாக சொல்லக்கூடிய பாலாஜி என்ற நபர் அரசு தரப்பில் சாட்சியமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் சாட்சியமாக விசாரணை செய்யப்படமாமல் இருந்து வருவதாக கூறி

அவரை சாட்சியமாக விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மேற்படி பாலாஜி என்பவர் அழைப்பாணையில் பேரில் அ.சா-14 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**8.** இந்த அ.சா-14 ஆனவர் அரசு தரப்பு வழக்கில் காயம் பட்ட நபராக இருந்தபோதிலும், இவர் தனது சாட்சியத்தில் இந்த எதிரிகள் தன்னை தாக்கியதாக கூறாத காரணத்தினால் இவரது சாட்சியத்தை கு.வி.மு.ச பிரிவு 313(1)(b) ன் கீழ் எடுத்து கூறவேண்டிய அவசியம் ஏற்படவில்லை, என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**9.** இவ்வழக்கில் இறுதி முடிவுகான கீழ்கண்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(i) 1ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும்.

(ii) 2ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு

3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும்.

(iii) 3ம் எதிரி மீது. இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும்.

(iv) 4ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்) -ன் கீழும்.

(v) 5ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s),இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும்.

(vi) 7ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 147 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?.

10. அரசுத்தரப்பு வாதம்.

இவ்வழக்கில் குற்றச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அ.சா.1, அ.சா-3 , அ.சா-4 , அ.சா-5 ஆகியோர்கள் தங்களது சாட்சியங்களில் இந்த எதிரிகள் தங்களை தாக்கியதாக கூறியுள்ளனர். மேலும் இந்த அ.சா-1. ஆனவர் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு சம்மந்தமாக கு.வி.மு.ச பிரிவு 164 கீழான வாக்குமூலம் அளித்துள்ளார். அந்த வாக்குமூலத்தை அ.சா.-8 ஆன நீதித்துறை நடுவர் அ.சா.ஆ.3 ஆக பதிவு செய்யதுள்ளார். அதில் சம்பவ சமயத்தில் சாதி பெயரை சொல்லி திட்டியுள்ளதாக கூறியுள்ளனர். மேலும் இந்த சாட்சிகளுக்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளதற்கான விபத்து பதிவேடுகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா-1 பறையர் சமூகத்தை

சேர்ந்தவர் என்பதற்காக அ.சா.ஆ-2 சாதி சான்றிதழ் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் குற்றம் இழைத்த இந்த எதிரிகள் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டும் என வாதம் செய்துள்ளார்.

11. 1 முதல் 5 மற்றும் 7 எதிரிகள் தரப்பு வாதம்

இவ்வழக்கின் எதிரிகள், இந்த அரசு தரப்பில் சொல்லப்படும் சாட்சிகள் யாரையும் தாக்கவில்லை, அரசு தரப்பு சாட்சிகள் அனைவரும் குறுக்கு விசாரணையின் போது கூட்டத்தில் இருந்த நபர்கள் தங்களை தாக்கியதாகவும், தங்களை தாக்கியவர்கள் யார் என்று தங்களால் சொல்ல இயலாது என்று கூறியுள்ளனர். மேலும் அ.சா-1 ஆனவர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கொடுத்த அ.சா.ஆ-3 வாக்குமூலத்தை பொருத்தவரையில் போலீசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் தான் வாக்குமூலம் கொடுத்ததாக கூறியுள்ளார். இதனால் அ.சா.ஆ-3 ஆன வாக்குமூலத்தை எதிரிகளுக்கு எதிராக பயன்படுத்த இயலாது எனவும், இந்த வழக்கின் எதிரிகள் குற்றமற்றவர்கள் எனவும், மேலும் இந்த வழக்கில் உள் பல்வேறு முரண்பாடுகள் மற்றும் குறைபாடுகளை சுட்டிக்காட்டி எதிரிகளை இந்த வாழக்கிலிருந்து எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

12. <u>தீர்வு</u>

இவ்வழக்கில் குற்றச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அ.சா.1, அ.சா-3, அ.சா-4 , அ.சா-5 ஆகியோர்கள் தங்களது சாட்சியங்களில் இந்த எதிரிகள் தங்களை தாக்கியதாக கூறியுள்ளனர். ஆனால் இந்த சாட்சிகள் தங்களது குறுக்கு விசாரணையில் முற்றிலும் மாறுபாடாக சாட்சியம் அளித்துள்ளதாக எதிரிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டள்ள காரணத்தினால் இந்த சாட்சியங்களின் குறுக்கு விசாரணை அம்சங்கள் பார்வையிடப்பட்டது.

அ.சா-1 மோகன் தனது குறுக்கு விசாரணையில்,

| |
|---|
| "சம்பவம் நடந்து முடியும் வரை எனக்கு எதுவும் தெரியாது. பின்னர் சத்தம் கேட்டு போனேன். நாங்கள் வசிக்கும் தெருவிற்கும், எதிரிகள் வசிக்கும் தெருவிற்கும், 200 மீட்டர் தூரம் இருக்கும், எங்கள் தெருவிற்கு பக்கத்தில் கருங்கற்கள் கிடந்த இடத்தில் சத்தம் கேட்டது. நான் போய் பார்த்தபோது ஒருவரை ஒருவர் கற்கலால் அடித்து கொண்டிருந்தார்கள். இது இரவில் நடந்தது. யார் யாரை அடித்தார்கள் என்று தெரியவில்லை. நான் போகும் போது 100 பேர் கும்பலாக இருந்தார்கள். தங்கையன் மளிகை கடைக்கு முன்பு நானும் எனது மனைவியும், நின்று கொண்டிருந்தோம். சம்பவம் நடந்து அரை மணி நேரம் கழித்து நான் போனேன். இரு தரப்பிலும், அடிபட்டவர்களை எல்லாம் மருத்துவமனைக்கு போலீசார் அழைத்து சென்று விட்டார்கள். நான் அடிபட்டு மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன். யார் போலீசாருக்கு தகவல் கொடுத்தார்கள் என்று தெரியது. நான் மயக்க நிலையில் இருந்ததால் மருத்துவமனைக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆம்புலன்ஸ் வந்தது எதிரிகளுக்கும் எனக்கு இதற்கு முன்பு முன்பகை எதுவும் கிடையாது. மலையரசன் என்ற நபர் இது சம்மந்தமாக என்னென்ன |

> நடவடிக்கை எடுத்தார் என்று எனக்கு தெரியாது. மன்னார்குடி அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சைகயிலிருந்தபோது 02.01.2017 அன்று காவல் துறையினர் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள்" என கூறியுள்ளார்.

அ.சா- 3 சுந்தர் தனது குறுக்கு விசாரணையில்,

> "சம்பவம் நடந்த அன்று இருட்டாக இருந்தது என்று சொன்னால் ஆமாம் இருட்டுதான். சம்பவ தேதியன்று குறிப்பாக கூட்டமாக இருந்த காரணத்தினால் யார் ஜாதி பெயரை சொல்லி அசிங்கமாக பேசியது யார் என தெரியாது என சொன்னால், ஆமாம் தெரியாதுதான், ஆனால் யாரோ ஜாதி பெயரை சொல்லி பேசினார்கள். அந்த இருட்டு நேரத்தில் கூட்டமாக வந்த நபர்கள்தான் எங்களை தாக்கினார்கள் என்றும், அதில் இருந்தவர்கள் யார் யார் என குறிப்பாக தெரியாது என சொன்னால், ஆமாம்" என கூறியுள்ளார்.

அ.சா-4 ராஜராஜன் தனது குறுக்கு விசாரணையில்,

> "எங்களில் ஒரு தரப்பினரும், ஊரில் உள்ளவர்களும் என ஒரு தரப்பினர் என இரண்டு பிரிவுகளாக இருந்து எங்களுக்குள் ஏற்பட்ட தள்ளு முள்ளின் காரணமாக தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் ஆமாம். இந்த வழக்கு சம்பவத்தில் எங்களை இந்த எதிரிகள் யாரும் தாக்கினார்களா என்றால் சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் எங்களை யார் தாக்கினார்கள் என்று தெரியாது" என கூறியுள்ளார்.

அ.சா-5 கவிதா தனது குறுக்கு விசாரணையில்,

> "சம்பவம் நடந்த அன்று இருட்டாக இருந்தது என்று சொன்னால் ஆமாம் இருட்டுதான். சம்பவ தேதியன்று குறிப்பாக கூட்டமாக இருந்த காரணத்தினால் யார் ஜாதி பெயரை சொல்லி அசிங்கமாக பேசியது யார் என தெரியாது என

| |
|---|
| சொன்னால், ஆமாம் தெரியாதுதான், ஆனால் யாரோ ஜாதி பெயரை சொல்லி பேசினார்கள். அந்த இருட்டு நேரத்தில் கூட்டமாக வந்த நபர்கள்தான் எங்களை தாக்கினார்கள் என்றும், அதில் இருந்தவர்கள் யார் யார் என குறிப்பாக தெரியாது என சொன்னால், ஆமாம்" என கூறியுள்ளார். |

பாதிக்கப்பட்டதாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ள மேற்படி அ.சா.1, அ.சா3, அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் குறுக்குவிசாரணையில் கூறியுள்ள சங்கதிளை பார்க்கும் போது உண்மையில் இந்த எதிரிகள் தான் மேற்படி சாட்சியங்களை தாக்கினார்களா என்பது சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் உள்ளது.

**13.** இவ்வாறான நிலையில் அ.சா.6 ரவி மற்றும் அ.சா.10 பாஸ்கர் பார்வை மகஜர் சாட்சியங்கள், நீதித்துறை நடுவரான அ.சா.8 சிவா, அ.சா-1 அளித்த கு.வி.மு.ச பிரிவு 164-ன் கீழ் அ.சா.ஆ.3 வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளதாக கூறியுள்ள சாட்சியம், சாட்சிகளுக்கு சிகிச்சையளித்த அ.சா.9 கீர்த்திவாசன் என்பவரின் சாட்சியம் விபத்து பதிவேடுகள், சாதி சான்றிதழ் வழங்கிய அ.சா-7 ஆன வட்டாட்சியர் சாட்சியம், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா-11 ஆன உதவி ஆய்வாளர் முதலில் இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த அ.சா-12 ஆன காவல் துணை கண்காணிப்பாளர் பின்னர் தொடர் விசாரணை செய்த அ.சா-13 காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்களின் சாட்சியங்களை

வைத்து இந்த 1 முதல் 5 மற்றும் 7 எதிரிகள் குற்றம் செய்துள்ளார்கள் என இந்நீதிமன்றம் முடிவு காண இயலாது என்று கருதுகிறது.

**14.** மேற்கண்டவாறு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்ததில் இந்த வழக்கில் உள்ள 1 முதல் 5 மற்றும் 7 எதிரிகள் குற்றம் செய்துள்ளதாக அறுதியாக முடிவு செய்யும் வகையில் சாட்சியங்கள் இல்லை என்பதால் இந்த வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு வழங்க இந்நீதின்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக,** 1-வது எதிரி மீது இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழும்,

2 வது எதிரி மீது இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va).-ன் கீழும்,

3 வது எதிரி மீது இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு

3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va).-ன் கீழும்,

4 வது எதிரி மீது இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), -ன் கீழும்,

5 வது எதிரி மீது இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s),இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்), இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va). -ன் கீழும்,

7 வது எதிரி மீது இ.த.ச.பிரிவு 147 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 149 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(v), இ.த.ச.பிரிவு 323 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 (6 எண்ணிக்கைகள்),

இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் 1 முதல் 5 மற்றும் 7 எதிரிகளை மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச் சாட்டுகளிலிருந்து 1 முதல் 5 மற்றும் 7 எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 235-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 27 -ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.27 20:02:04 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா-1 | மோகன் - புகார்தாரர் |
| அ.சா-2 | பார்த்திபன் |
| அ.சா-3 | சுந்தர் |
| அ.சா-4 | ராஜராஜன் |
| அ.சா-5 | கவிதா |
| அ.சா-6 | ரவி |
| அ.சா-7 | மலர்கொடி - வட்டாட்சியர் |
| அ.சா-8 | சிவா - நீதித்துறை நடுவர் |
| அ.சா-9 | கீர்த்திவாசன் - மருத்துவர் |
| அ.சா-10 | பாஸ்கர் |
| அ.சா-11 | ராஜேந்திரன் - காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா-12 | ரவிச்சந்திரன் - கூடுதல் காவல் கண்காணிப்பாளர் |
| அ.சா-13 | குணசேகரன்- குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளர் |
| அ.சா-14 | பாலாஜி |

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்</u>:-**

| | |
|---|---|
| அ.சா.ஆ-1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ-2 | அ.சா.1 மோகன் என்பவரது சாதி சான்றிதழ் |
| அ.சா.ஆ-3 | அ.சா.3-ன் வாக்குமூலம் |
| அ.சா.ஆ-4 | அ.சா.1-க்கான விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ-5 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.10-ன் கையெழுத்து |

| | |
|---|---|
| அ.சா.ஆ-6 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ-7 | திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செயல்முறை ஆணை |
| அ.சா.ஆ-8 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ-9 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ-10 | திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செயல்முறை ஆணை |
| அ.சா.ஆ-11 | அ.சா.2-க்கான விபத்து அறிக்கை |
| அ.சா.ஆ-12 | அ.சா.4-க்கான விபத்து அறிக்கை |
| அ.சா.ஆ-13 | சுனில் என்பவருக்கான விபத்து அறிக்கை |
| அ.சா.ஆ-14 | கார்த்தி என்பவருக்கான விபத்து அறிக்கை |
| அ.சா.ஆ-15 | சுந்தர் என்பவருக்கான விபத்து அறிக்கை |
| அ.சா.ஆ-16 | பாலாஜி என்பவருக்கான விபத்து அறிக்கை |
| அ.சா.ஆ-17 | ராஜ்குமார் என்பவருக்கான விபத்து அறிக்கை |

**அரசுத்தரப்பு சான்றுபொருட்கள்**: இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சி , சான்றவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்:-**

இல்லை

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.27 20:02:13 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.